## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. DVC.16/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அகோரமூர்த்தி | Prosecution | RW-1 Cross |
| Father Name | ஜெயபாலன் | Court | JM, Court, Sirkali. |
| Village | மங்கைமடம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 38/2026 |

**Solemnly affirmed by Tmt.R.Geetha Grade-3 Bench Clerk, of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

**03.02.2026**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்குவிசாரணை**

**1.** என் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் ஒரே ஒரு தங்கச்சி இருக்கிறார். அவர்களுக்கு திருமணமாகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. அந்த திருமணம் என் பெற்றோர் பார்த்து நிச்சயத்த திருமணமா என்றால் ஆமாம். என் தங்கையை பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வந்தபோது நான் என்னென்ன சீர் செய்ய வேண்டும் என்பது பற்றி எல்லாம் அவர்களிடம் பேசினேனா என்றால் பேசினேன். எனக்கும் மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணமும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது என்றால் சரிதான். என் தங்கை திருமணத்தில் நடந்தது போல தான் பெண் பார்க்கப்பட்டு சீர்வரிசை சாமான்கள் குறித்து எல்லாம் பேசிக்கொள்ளப்பட்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நான் மனுதாரர் ரோடு எனது வீட்டில் தான் குடித்தனம் நடத்தினேன் என்றால் சரிதான். அவ்வாறு திருமணமான புதிதில் என் வீட்டில் வேறு யார் யார் இருந்தார்கள் என்றால் நான், என் அம்மா மற்றும் அப்பா ஆகியோர் இருந்தோம்.

**2.** திருமணம் ஆகி ஒரு மாதத்திலேயே நான் வெளிநாடு சென்று விட்டேன் என்றால் ஆமாம். வேலைக்காக சிங்கப்பூர் சென்றேன். நான் அங்கு ஏசி மெக்கானிக் ஆக வேலை பார்த்தேன் என்றால் சரிதான். அப்போது என்னுடைய மாத சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.40,000/- ஆகும். திருமணம் ஆகி எத்தனை நாட்கள் கழித்து என் மனைவி கர்ப்பம் தரித்தார் என்றால் நான் வெளிநாடு சென்று விட்டு இரண்டு வருடங்கள் கழித்து வந்த பிறகு கர்ப்பம் தரித்தார். எனக்கும் மனுதாரருக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். அந்த குழந்தை குறை மாதத்தில் பிறந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்தக் குழந்தை எந்த மருத்துவமனையில் பிறந்தது என்றால் அது பற்றி எந்த தகவலும் எனக்கு தெரிவிக்கவில்லை என்பதால்

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.02.03 19:15:27 +0530

தெரியாது. நான் சொல்வது பொய் என்றாலும் குழந்தை குறை மாதத்தில் பிறப்பதால் தாய்க்கும் சேய்க்கும் ஆபத்து என்று மருத்துவமனையில் கூறி சிகிச்சைக்கு ரூபாய் 8,00,000/- செலவு ஆகும் என மருத்துவர்கள் கூறிய தகவலை மனுதாரர் என்னிடம் கூறினார் என்றாலும் நான் அதற்கு 'பணம் கொடுக்க முடியாது, இருவரும் செத்தால் சாகட்டும்' என சொல்லிவிட்டேன் என்றாலும் சரியல்ல. நான் அவ்வாறு சொல்லி விட்டதால் மனுதாரரின் பெற்றோர்களே செலவு செய்து இருவரையும் காப்பாற்றினார்கள் என்றால் சரியல்ல.

**3.** மனுதாரர் என் மீது சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்தார் என்றால் சரிதான். அந்த போலீஸ் விசாரணைக்கு நான் ஆஜராகி என் மனைவியை இரண்டு நாட்களில் வீட்டிற்கு அழைத்துச் செல்வதாக சொல்லியிருந்தேன் என்றால் சரியல்ல. நான் ஒரு மாதம் கால அவகாசம் கேட்டு யோசித்து சொல்கிறேன் என்று தான் விசாரணையில் கூறினேன். நான் அவ்வாறு சொல்லிவிட்டு இரண்டு நாட்களில் விவாகரத்து கோரி மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் மனுதாரர்ரோடு சேர்ந்து வாழக்கூடாது என்பதற்காக குற்ற நடவடிக்கைகளில் இருந்து தப்பிப்பதற்காக உடனடியாக விவாகரத்து அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர்ரோடு சேர்ந்து வாழ நிறைய முயற்சிகள் செய்ததாக சொல்லும் நிலையில், சட்டரீதியான முயற்சிகள் ஏதேனும் எடுத்தேனா என்றால் சட்ட ரீதியாக எடுக்கவில்லை ஆனால் பெரியோர்களை வைத்து பேசினேன். நான்தான் வேண்டுமென்றே மனுதாரரை நிராகரித்தேன் என்றாலும் பெரியோர்கள் வைத்து அவர்தான் சமரசம் பேசினார் என்றாலும் நான் அதற்கு ஒத்துழைக்கவில்லை என்றாலும் சரியல்ல. முதலிரவில் மனுதாரர் என்னை தாக்கியதாக சொல்வது தவறு என்றாலும் நான் தான் அவரை உருவ கேலி செய்து தரக்குறைவாக நடத்தினேன் என்றாலும் சரியல்ல.

**4.** மனுதாரர் கர்ப்பமாக இருந்த காலகட்டத்தில் என் சகோதரி குழந்தைகளுக்கு காதணி விழா ஏற்பாடு ஆகியிருந்தது என்றால் சரிதான். மனுதாரர் கர்ப்பமாக இருக்கும் காரணத்தால் காதணி விழா நடத்தக்கூடாது என என் வீட்டு பெரியோர்கள் கூறியதன் பேரில் நான் அந்த கர்ப்பத்தை கலைக்க வற்புறுத்தினேன் என்றால் சரியல்ல. நானும் என் குடும்பத்தாரும் தண்ணீரில் மருந்தை கலந்து கொடுத்து கர்ப்பத்தை கலைக்க முயற்சி செய்தோம் என்றாலும் அவர் அதை குடிக்காமல் தட்டி விட்டு தப்பித்துவிட்டார் என்றாலும் சரியல்ல. மனுதாரரின் ஆடை ஆபரணங்கள் உள்ளிட்ட சாமான்கள் இன்று வரையிலும் என் வீட்டில் தான் உள்ளது என்றால் தவறு. 2021ம் வருடத்திலேயே அவர் அவற்றை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார். நான் சொல்வது தவறு என்றாலும் நகை உட்பட அனைத்து பொருட்களும் என் வசம்தான் உள்ளது என்றாலும் சரியல்ல.

**5.** 7 பவுன் நகை மனுதாரருக்கு போட்டதாக சொல்லும் நிலையில் அதற்கு சான்றாக ரசீது ஏதேனும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக 7 பவுன் நகை போட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில்

KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.02.03 19:15:35 +0530

மனுதாரர் ரோடு சேர்ந்து வாழ நினைத்திருந்தால் சேர்ந்து வாழும் வழக்கு தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் அதற்கு மாறாக விவாகரத்து வழக்கு நான் தாக்கல் செய்தது உண்மையில் எனக்கு மனுதாரரோடு வாழ விருப்பமில்லை என்பதை காட்டுகிறது என்றால் சரியல்ல. மனுதாரர் உண்மைக்கு புறம்பான செய்திகளை காவல் நிலையத்தில் சொல்லி பொய் புகார் கொடுத்து என்னையும் என் குடும்பத்தாரையும் தொல்லை செய்ததால் என்னையும் அறியாமல் அவரை என் மனது வெறுத்து விட்டது. நான் வெளிநாடு போக முடியாமல் எனது பாஸ்போர்ட்டை வாங்கி வைத்து கொண்டு மனுதாரர் எனது வாழ்க்கையை வீணடித்துவிட்டார். உண்மையில் நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**6.** உண்மையில் நானும் என் குடும்பத்தாரும் தான் மனுதாரருக்கு வரதட்சணை கொடுமை செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. ஏன் கொடுமை படுத்துகிறீர்கள் என்று மனுதாரர் கேட்டதற்கு நான் மீண்டும் மீண்டும் அவரை மனரீதியாக கொடுமைப்படுத்தி உள்ளேன் என்றால் சரியல்ல. நானும் என் பெற்றோரும் சேர்ந்துதான் மனுதாரரை வீட்டை விட்டு அடித்து விரட்டினோம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு மருத்துவம் பார்ப்பதற்கு அவரது பெற்றோர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக நான் கூறியுள்ள நிலையில் எந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஏனெனில் அவர்கள் என்னிடம் தெரிவிக்கவில்லை. மனுதாரருக்கு மனநிலை சரியில்லை என நான் சொல்லும் நிலையில் அவருக்கு சிகிச்சை வழங்க நான் முயற்சிகள் ஏதேனும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. உண்மையில் அவர் நல்ல மனநிலையில்தான் உள்ளார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மனுதாரர் இப்போதும் என்னோடு சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் என்னை பழிவாங்க வேண்டும் என்பதற்காகத்தான் என்னோடு சேர்ந்து வாழ வேண்டும் என்கிறார். மனுதாரர் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக மிரட்டியதாக நான் சொல்லி உள்ளது பொய் என்றால் சரியல்ல.

**7.** குழந்தை பிறந்த விபரமே எனக்கு தெரியாது நிலையில் நான் அந்த குழந்தையை சென்று பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அந்த காரணத்தை வைத்துக் கொண்டு விவாகரத்து வழக்கு மயிலாடுதுறை முதன்மை சார்ந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக நான் சொல்லி உள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சீர்காழி மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரர் கொடுத்த புகார் சமூக நலத்துறைக்கு அனுப்பப்பட்டு அதன் பெயரில் தான் இந்த வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.

**8.** நான் சொந்தமாக அம்மன் ஏசி மெக்கானிக் ஷாப் வைத்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் கடை எதுவும் நடத்தவில்லை. நான் வேறு வேலைக்கு செல்கிறேனா என்றால் செல்லவில்லை. நான் உள்ளூரில் ஏசி மெக்கானிக் கடை வைத்து மாதம் ரூ.1,00,000/- வரை சம்பாதிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வெறும்

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.02.03 19:15:42 +0530

ரூ.400/– மட்டுமே சம்பாதிப்பதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. கொரோனா காலகட்ட முடிந்து 5 வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான். அந்த நோய்க்கு நான் தற்போது சிகிச்சை எடுத்து வருவதாக சொல்வது தவறு என்றால் அது தவறு கிடையாது. மன உளைச்சல் காரணமாக எனக்கு உடல்நிலை சரியில்லாமல் ஆகிவிட்டது. நான் ஆரோக்கியமாக உள்ளேன் என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மனுதாரர் என்னை நோயுற்ற காலத்தில் பார்க்க வரவில்லை என சொல்லி உள்ளது தவறு என்றால் சரியல்ல.

**9.** நான் விவாகரத்து கேட்டு அறிவிப்பு அனுப்பியது 4 வருடங்களுக்கு முன்பு என்றால் 5 வருடங்களுக்கு முன்பு ஆகும். அவ்வாறு நான் அறிவிப்பு அனுப்பிவிட்டு எனது முதல் விசாரணையில் மனுதாரர் தான் என்னை விட்டு பிரிந்து சென்று புறக்கணித்து வாழ்வதாக விட்டதாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் எனது பெற்றோருக்கு மாதம் எவ்வளவு ரூபாய் செலவு செய்கிறேன் என்றால் ரூ.3000/– செலவு செய்கிறேன். அந்த பணத்தில் நாங்கள் மூவரும் சாப்பிட்டு மருத்துவ செலவுகளையும் மேற்கொண்டு வருகிறோமா என்றால் ஆமாம். ரேஷன் கடையில் இலவச அரிசி வாங்கி ஜீவனம் செய்து வருகிறோம். சட்டபூர்வமாக நான் எனது மனைவிக்கு ஜீவனாம்சம் கொடுக்கக் கூடாது என்பதற்காக செலவுகள் குறித்து குறைத்து சொல்லி பொய் வழக்கு ஆடுகிறேன் என்றால் சரியல்ல.

**10.** 3 நபர்கள் இந்த காலகட்டத்தில் ரூ.3,000/– வைத்துக் கொண்டு ஜீவிக்க முடியாது என்றாலும் நான் சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. நான் இருப்பது சொந்த வீடு தான் என்றால் சரிதான். அந்த வீடு என் தந்தை பெயரில் உள்ளது. அதேபோல எங்களுக்கு ஒரு வீட்டுமனையும் உள்ளது என்றால் அதுவும் என் தந்தை பெயரில் தான் உள்ளது. எங்களுக்கு விவசாய நிலங்களும் உள்ளது என்றால் கிடையாது. எனக்கு போதுமான வசதி மற்றும் வருமானம் இருந்தும் மனுதாரரையும் குழந்தையையும் எந்தவித காரணமும் இல்லாமல் புறக்கணித்து அவர்களை பராமரிக்க மறுக்கிறேன் என்றால் சரியல்ல. சட்டப்படி நான் அவர்களை பாதுகாக்க கடமைப்பட்டவன் என்றால் சரிதான். ஆனால் என்னால் முடிந்ததை தான் செய்ய முடியும். நான் கடமைப்பட்டவனாக இருந்தும் வேண்டுமென்றே எனது மனைவி மற்றும் குழந்தைகளை பராமரிக்க தவறுகிறேன் என்றாலும் ஆகவே இந்த மனு சரியானது என்றாலும் மற்றும் அது அனுமதிக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.

**குறுக்குவிசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.02.03 19:15:49 +0530